17.9.08

செய்தி வெளியீடு -765

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கொள்முதல் நிலையங்களில் டி.கே.எம். – 9 பொது ரக நெல் கொள்முதல் செய்யப்படும்

காவிரி டெல்டா பாசன பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் நெல் ரகங்களில் ஒன்றான டி.கே.எம். – 9 பொது ரக நெல்லையும் அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்ய வேண்டும் என பல்வேறு விவசாய சங்கங்களும் விவசாயிகளும் வலியுறுத்தி வந்தனர்.

தமிழ்நாட்டில் டி.கே.எம். – 9 ரக நெல் கொள்முதல் செய்வது சில வருடங்களாக நிறுத்தப்பட்டது. எனினும், விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்றும், அவர்களுடைய நலன் புறக்கணிக்கப்படாமலும், அவர்களது நெல்லுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள குறைந்த பட்ச ஆதார விலையுடன் மாநில அரசு வழங்கும் கூடுதல் ஊக்கத் தொகையும் முழுவதுமாக கிடைத்திடும் வகையிலும் டி.கே.எம். – 9 ரக நெல்லை உடனடியாக அரசு நேரடி கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்ய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் விவசாயிகள் பயிரிடும் அனைத்து ரக நெல்லும் அரசு நேரடி கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படும் என்றும், விவசாயிகள் இந்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9